

தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களிடம் நேற்று (4.8.2023) தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம் தேசிய தர மதிப்பீட்டில் A+ கிரேடு பெற்றதற்கான சான்றிதழை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) முனைவர் சு.பாலசுப்பிரமணியன், தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழக இயக்குநர் தமிழ்மாறன் மற்றும் துணை இயக்குநர்கள் முனைவர் இ.குமார், திருமதி மீனாம்பிகை ஆகியோர் உள்ளனர்.



கனடா நாட்டின் பழமை வாய்ந்த டல்ஹவுசி பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இருந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களிடம் 03.08.2023 அன்று வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கலந்துரையாடினார்.கலந்துரையாடல் நிகழ்வில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் திருமதி வி.கீதாலட்சுமி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் திருமதி.இரா. பிருந்தா தேவி கனடா பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பேராசிரியர் பிரித்விராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

# முத்தமிழறிஞர் கலைஞரின் 5ஆம் ஆண்டு நினைவுநாள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி வேண்டுகோள்!

இராணிப்பேட்டை, ஆக. 5-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் நினைவு நாளையொட்டி நாளை மறுநாள் மாவட்டம் முழுவதும் கலைஞர் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துமாறு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர்-அமைச்சர் ஆர். காந்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

பதினான்கு வயதில் தமிழ் கொடியேந்தி, தமிழ் வாழ்க என முழக்கமிட்டு பொது வாழ்வை துவங்கிய கலைஞர் மாணவப் பருவம் முதலே இயக்கத்தை இணைத்து, பெரியாரின் பெருஞ்சீடனாய், பேரறிஞர் அண்ணாவின் அன்பு தம்பியாய், வலம் வந்த கலைஞர் என் உயிரினும் மேலான உடன்பிறப்பே என்று தன் உயிரோடும், உணர்வோடும் கலந்தவர், கலைஞர் அவர்கள் பன்முகத் திறன் கொண்டவர். அவரது எழுத்தாற்றல் எங்களை அடிமையாக்கியது, பேச்சாற்றல் எங்களை வீறு கொண்டு எழச்செய்தது, பட்டித்தொட்டி எங்கும் கழக கொள்கைகளை பறைச்சாற்றி, கழகத்தை காத்து நின்ற காவிய தலைவன் அரசியலில் அவரை ஏய்த்தோரும், போற்றினோரும், அரசியல் வாழ்வு பெற்றது இதை காலம் மறந்திடாது.

கலைஞர் சங்கத் தமிழ் கண்டார், குறள் ஓவியம் கண்டார், பொன்னர் சங்கர் என்னும் பல அரிய புத்தகங்களை தந்தாலும், தொல்காப்பிய பூங்கா இந்த காலம் உள்ளவரை அவரது பெயரை காத்து நிற்கும், வள்ளுவர் கோட்டமும், பூம்புகாரும், குமரி முனையிலே வானுயர்ந்து நிற்கும் வள்ளுவர் சிலையும், நீங்கா புகழ் சேர்த்த கழகத்தின் பொன்விழா கண்ட தலைவர், அரசு கட்டிலிலே கண்ணொளி திட்டம், கை ரிக்ஷா ஒழிப்பு, குடிசை மாற்று வாரியம், பேருந்து பொதுஉடமையாக்கியது, மே தின விடுமுறை நாள், பெண்ணுக்கு சொத்துரிமை, உள்ளாட்சியிலே 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு, பெரியார் நினைவு சமத்துவபுரம், அண்ணா மறுமலர்ச்சி திட்டம், கலைஞர் காப்பீட்டு திட்டம், உழவர் சந்தை திட்டம், முதியோர் ஓய்வு தொகை, விலங்குகளுக்கும் வருமுன் காப்பு திட்டம், ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, இடஓதுக்கீட்டை அமல் செய்தது, முஸ்லீம்களுக்கு, அருந்ததியர்களுக்கு, உள் இடஒதுக்கீடு வழங்கியது, காலத்தால் மறைக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது,



தந்தை பெரியாரின் எண்ணங்களை, பேரறிஞர் அண்ணாவின் கனவுகளை, பெரியாரின் துணிவோடும், அண்ணாவின் கனிவோடும், செயலாற்றிய சிறுபான்மை மக்களின் பாதுகாவலர் 2018 ஆகஸ்ட் 7 ம் தேதி இயற்கை உங்களை எங்களை விட்டு பிரிய செய்தாலும், மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்று பேரறிஞர் அண்ணாவின் கூற்றின் படி அரசியல் எதிரிகளும், உங்களை புகழ்ந்த போது மகிழ்ச்சியிலே திளைத்தவர்கள் நாங்கள், தமிழ்நாட்டின் தலைவர் மட்டுமல்ல, இந்தியாவின் வழிகாட்டி, பல பிரதமர்களையும், குடியரசுத் தலைவர்களையும், உருவாக்கி சாதனை படைத்த சரித்திர தமிழ் அறிஞர் கலைஞர்.

தகைமைசால் தலைவராக - எழுத்தாளராக - கவிஞராக சொற்பொழிவாளராக - திரைக்கதை வசன கர்த்தாவாக - இலக்கியவாதியாக - திரைப்படத் தயாரிப்பாளராக - தலைசிறந்த நிர்வாகியாக - தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக - உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராக கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 வது நினைவு நாளினையொட்டி 07.08.2023 திங்கள் கிழமை காலை 09.00 மணிக்கு நமது மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் ஊர் கிளை, வட்ட கிளை தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச் சூழல் அணி, அயலக அணி, அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்தும் வகையில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### மோடி ஆட்சியில் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது!

# இந்தியாவின் இளைஞர்கள் இருண்ட காலத்தை நோக்கிச் செல்கிறார்கள்!

## அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக. 5-

“மோடி ஆட்சியில் நாட்டில் வேலையில்லா திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது. இந்தியாவின் இளைஞர்கள் இருண்ட காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்” என்று அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டிருப்பதாவது:-

மோடி ஆட்சியில் கடந்த 5 ஆண்டுகளில் 12 லட்சத்து 20 ஆயிரம் வேலைகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 2 லட்சத்து 44 ஆயிரம் வேலை வாய்ப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இந்த புள்ளி விவரங்கள் அனைத்தும் ஒன்றிய அரசின் வருங்கால வைப்பு நிதி தகவல்களின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு 2 கோடி வேலை வாய்ப்பு என்ற வாக்குறுதி என்ன ஆனது?

இந்த வாக்குறுதிப்படி கடந்த 9 ஆண்டுகளில் 18 கோடி வேலை வாய்ப்புகள் உருவாகியிருக்க வேண்டுமே? நாட்டின் இளைஞர்கள் இருண்ட எதிர்காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். தெருக்களில் கோபமும், வன்முறையும் நிலவுவதில் ஆச்சரியமில்லை

வேலைவாய்ப்பை வழங்குவதில் பா.ஜ.க. அரசு படுதோல்வி அடைந்துவிட்டது. கற்பனை கூட செய்ய முடியாத அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம், வலிமிகுந்த விலைவாசி உயர்வு மற்றும் பா.ஜ.கவால் தூண்டிவிடப்பட்ட வெறுப்பு ஆகியவைதான் இத்தகைய பேரழிவுக்கு காரணம்.

ஏழை மற்றும் நடுத்தர மக்கள் வாழ்வதற்கு, பா.ஜ.கவை ஆட்சியிலிருந்து தூக்கி எறியவேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் - நாளை

# மேலப்பாளையத்தில் மாபெரும் ரத்ததான முகாம்!

## மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமை! சு.சுப்பிரமணியன் அறிக்கை!

நெல்லை.ஆக.5-

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5 ம் ஆண்டு நினைவை முன்னிட்டு மாபெரும் இரத்த தான முகாம் மேலப்பாளையம் காவல் நிலையம் அருகில் ஆசாத் பள்ளியில் நாளை (6ம் தேதி - ஞாயிற்றுக்கிழமை) காலை 11.30 மணி அளவில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் தலைமையில் நடைபெறுகிறது. என மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5 ம் ஆண்டு நினைவை முன்னிட்டு நெல்லை மாநகர திமுக சார்பில் இரத்ததான சிறப்பு முகாம் மேலப்பாளையம் காவல் நிலையம் அருகில் உள்ள ஆசாத் பள்ளியில் நாளை (6ம் தேதி - ஞாயிற்றுக்கிழமை) காலை 11.30 மணி அளவில் நடைபெறுகிறது.

இந்த இரத்ததான முகாம் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில் நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் முன்னிலையில் நடைபெறுகிறது.

அன்று சேமிக்கப்படும் இரத்தத்தை ஏழை,எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்து சென்று அங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பயன்படும் வகையில் உபயோகப் படுத்துவார்கள்.

ஆகவே பகுதிக் கழகச் செயலாளர்கள் தங்கள் பகுதிக்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள்,வட்டச் செயலாளர்கள், மாநகரப் பிரதிநிதிகள்,வட்ட பிரதிநிதிகள், மாநகராட்சி கழக மாமன்ற உறுப்பினர்கள்,பாக முகவர்கள் ஆகியோர்களிடம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் அன்று நடைபெற்ற இரத்த தான முகாம் பற்றி எடுத்துக் கூறி கழக சொந்தங்கள் அனைவரையும் இந்த இரத்ததான முகாமில் கலந்து கொள்ள வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாநகர துணைச் செயலாளர் அப்துல் கையூம் செய்துள்ளார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### கலைஞர் நூற்றாண்டு விழா! நெல்லை கிழக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில்

# இராதாபுரம் கிழக்கு - குட்டம் டாடா நகரில் தெருமுனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் - நெல்லை ரவி சிறப்புரை!

நெல்லை.ஆக.5-

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின்நூற்றாண்டு விழா தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்டம் இராதாபுரம் கிழக்கு ஒன்றியம் குட்டம் டாடா நகரில் நாளை ( 6ம் தேதி ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி அளவில் நடைபெற உள்ளது.என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டம் இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஆர். ஜெகதீஷ் தலைமையில் மாவட்ட ஆதி திராவிட நலக்குழு துணை அமைப்பாளர் கள் பன்னீர்செல்வம்,தலைவர் சுந்தர்ராஜன்,துணை தலைவர் பத்தமடை காந்தி, சுடலை குமார், வல்லரசு,முருகன், ஆர்.கே.ஆர்.முருகன் அந்தோணி தேவதாசன்,சேகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் பாலச்சந்திரன் வரவேற்கிறார். நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், தலைமைக் கழகப் பேச்சாளர் நெல்லை ரவி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

கூட்டத்தில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினரும் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான சா.ஞான திரவியம்,மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்வில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜான்ரபீந்தர்,மாவட்ட தொழிலாளர்கள் அணி அமைப்பாளர் கேசவன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் எஸ்.என். முருகன்,மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பிரேமா, மாவட்ட மகளிர் அணி தலைவர் கமலா நேரு,ராதாபுரம் கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் முத்துராமலிங்கம்,ஒன்றிய துணை செயலாளர்கள் தனபால்,வாழ வந்த கணபதி, கென்னடி,ஒன்றிய பொருளாளர் வீனஸ் வீர அரசு, மாவட்ட பிரதிநிதி ஆறுமுகம்,ராஜன்,மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் ரோச், லிங்க தமிழரசன், கண்ணன், வேணுகோபால்,சக்தி குமார்,பரிமளம், ஸ்ரீதர்,நடராஜன்,சத்தியபாலன், ஞானராஜ், முத்து லட்சுமி, ஜெனிபர் தினகரன், சரோஜா மற்றும் ராதாபுரம் ஒன்றிய கிளை கழக செயலாளர்கள், ஊராட்சிக் குழுத் தலைவர்கள்,ஒன்றிய குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட பிரதிநிதி செல்வகுமார் நன்றி கூறுகிறார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# நெல்லை மாநகர இளைஞர் அணி சார்பில் பொதுக்கூட்டம் - நல உதவிகள் வழங்கல்!

## தமிழன் பிரசன்னா சிறப்புரை! டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்பு! கே.கே.கருப்பசாமி - கோட்டையப்பன் ஏற்பாடு!

நெல்லை.ஆக.5-

நெல்லை மாநகர தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாநகர திமுக இளைஞரணி அமைப்பாளர் கே.கே. கருப்பசாமி கோட்டையப்பன் ஏற்பாட்டில் மேலப்பாளையம் பஜார் திடலில் மேலப்பாளையம் பகுதி செயலாளர் துபாய் சாகுல் ஹமீது தலைமையில்

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை,மாயா செந்தில் சாலை குமார்,சபி முகம்மது, மைக்கேல், அலிப்மீரான்மைதீன், அன்பழகன் ஆகியோர் முன்னிலையில்நடைபெற்றது. மாநகர இளைஞரணி அமைப்பாளர் கே.கே.கருப்புசாமி கோட்டையப்பன் வரவேற்புரையாற்றினார். மாநகர துணை செயலாளர் அப்துல்கையூம் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் கழக மாநில செய்தி தொடர்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி. எம்.மைதீன் கான் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

கூட்டத்தில் முன்னதாக நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏ,எல், எஸ்,லெட்சுமணன்,மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன்,துணை மேயர் ராஜு ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் கழக தீர்மானக் குழு உறுப்பினர் சுப. சீதாராமன்,ஒன்றிய செயலாளர்கள் அருள்மணி,மாரியப்பன், முன்னாள் பொருளாளர் அருண்குமார், பகுதி செயலாளர்கள் சுப்பிர மணியன், நமச்சிவாயம்,அண்டன் செல்லதுரை, முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.கா.மணி,மாநகர நிர்வாகிகள் டாக்டர்.பொன் மணி, அண்ணாதுரை, மணி கண்டன், மேலப்பாளையம் மண்டல தலைவர் கதிஜா இக்லாம் பாசிலா, ஆமினா பீவி,முகமது சைபுதீன்,மகளிர் அணி அமைப்பாளர்கள் சௌந்திரம் முத்து ராஜ், அனிதா, மேரி, மாமன்ற உறுப்பினர்கள் ஜூலியட் மேரி, அல்லாபிச்சை,மகளிர் அணி தேவிகா, பத்மா,ஹமீதா,சங்கரலிங்கம், கழக பேச்சாளர்கள் நெல்லை ரவி,முத்தையா,மைக்மணி,திராவிட மணி,பாம்பு கிருஷ்ணன், உள்பட நெல்லை,தச்சை, பாளை, மேலப்பாளையம், பகுதி வட்டக் கழக செயலாளர்கள்,பகுதி கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் இனியன் நன்றி கூறினார்.

### தருமபுரி மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெருக்க

# பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் உடனே தொடங்குவீர்!

## மக்களவையில் டாக்டர் செந்தில்குமார் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 5 -

தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டி.என்.வி.செந்தில்குமார் நாடாளுமன்றத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டதாவது :

தருமபுரி மாவட்டத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் மூலம் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெருக்க பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் தொடங்க கடந்த 2010 முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசின் உத்தரவின் பெயரில் தர்மபுரி மாவட்ட நிர்வாகம் மூலம் நெக்குந்தி கிராமத்தில் அதற்கான இடம் அடையாளம் காணப்பட்டு தேர்வு செய்யப்பட்டது.இதனை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் சார்பில் அந்த இடத்தினை வந்து பார்வையிட்டு ஆய்வு செய்தனர் ஆனால் அதன் பிறகு பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் தொடங்குவதற்கான எந்த விதமான முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.



தொழில்துறையில் பின்தங்கிய தர்மபுரி மாவட்டத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் விரைவாக தொடங்கினால் மாவட்டத்தை சேர்ந்த 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் எனவே ஒன்றிய பாதுகாப்பு துறை அமைச்சர் அவர்கள் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு மூலம் இப்பணியை விரைவாக தொடங்குவதற்கு வழிவகை செய்து தருமபுரி மாவட்டத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் தொடங்கி மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்தார்.



இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 03.082023 அன்று மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தலைமையில், மாவட்டக் கழகச் செயலாளர், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம்,பரமக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் செ.முருகேசன், ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன் முன்னிலையில் மீனவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.